833/16
5644/15

சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர் வட்டம் – சிலமலை மற்றும் மார்க்கையன்கோட்டை பகுதிகளில் 150 ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், ரூ.50.00 இலட்சம் செலவில் 1 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி, 2 சீர்மரபினர் நல விடுதிகள் என மொத்தம் 3 பள்ளி விடுதிகள் புதிதாக துவங்கிட – ஆணை வெளியிடப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை

அரசாணை (நிலை) எண். 19

நாள்.08.02.2016

திருவள்ளுவர் ஆண்டு 2047
மன்மத, தை 25

படிக்கப்பட்டது :

1. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரது கடித எண். பி4/5644/ 2015, நாள். 18.09.2015.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரது கடித எண். சி2/5577/2015, நாள். 21.09.2015.

* * * * * *

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சிலமலை பகுதியைச்சுற்றி 2 அரசு பள்ளிகள் இயங்கி வருவதாகவும், அப்பள்ளிகளில் 1042 மாணவ / மாணவியர் பயில்வதாகவும், இதில் விடுதியில் சேரத் தகுதியான மாணவ, மாணவியரின் எண்ணிக்கை (பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/– கீழ்) 958 எனவும், விடுதிக்கான கட்டடம் கட்டுவதற்கு பள்ளி வளாகத்திலேயே உபரியான நிலம் உள்ளதாலும், மேலும் சிலமலையிலிருந்து சுமார் 22 கி.மீ. தூரத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி, ஒரு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி மற்றும் ஒரு கள்ளர் சீரமைப்பு மாணவர் விடுதிகளும் அமைந்துள்ளதால், சிலமலையில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்க பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதத்தில், தேனி மாவட்டம், மார்க்கையன்கோட்டை கிராமத்தில் இயங்கி வரும் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 267 மாணவ, மாணவியர் பயின்று வருவதாகவும், அவ்வூரை மையமாகக் கொண்டுள்ள குக்கிராமங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஏழை மாணவ, மாணவியர் பலர் கல்வி பயில போக்குவரத்து வசதி அதிகளவில் இல்லாததால், மார்க்கையன்கோட்டைக்கு வந்து செல்ல இயலாத நிலையில் மேற்படிப்பினை கைவிடும் சூழ்நிலை உள்ளதாகவும், அவ்விடுதிகளுக்கு தேவையான சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான இடவசதி பள்ளி வளாகத்திற்குள்ளும் மற்றும் அருகிலேயும் உள்ளதால் மார்க்கையன்கோட்டையில் 50 பேர் தங்கும் வகையில் கள்ளர் பள்ளி மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவங்க அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும் புதிதாக துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 3 பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை(1 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2 சீர்மரபினர் விடுதிகள்) துவக்கி செவ்வனே செயல்பட 50 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட ஒவ்வொரு விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்கள் கோரியுள்ளனர்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

4. மேலும், மேற்படி 3 பள்ளி விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.43,31,076/–ம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.6,25,000/–ம் சேர்த்து மொத்தம் ரூ.49,56,076/– (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுபத்தாறு மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும், புதிதாக துவங்கப்படும் 3 பள்ளி மாணவ/ மாணவியர் விடுதிகளுக்கு (1 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2 சீர்மரபினர் விடுதிகள்) ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர், ஒரு காவலர்/ ஏவலர், ஒரு துப்புரவு பணியாளர் வீதம் மொத்தம் 3 காப்பாளர்/ காப்பாளினிகள் பணியிடங்கள், 6 சமையலர் பணியிடங்கள், 3 காவலர் / ஏவலர் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் கால முறை ஊதியத்திலும், மேலும் 3 துப்புரவு பணியாளர் பணியிடங்களை தொகுப்பூதியத்திலும் தோற்றுவிக்கவும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்கள் கோரியுள்ளனர்.

5. பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 3 பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை (1 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2 சீர்மரபினர் விடுதிகள்) புதிதாக கீழ்கண்ட இடங்களில் துவங்கிட அனுமதித்தும்,

| வ. எண். | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி | | |
| 1. | தேனி மாவட்டம் | பள்ளி மாணவர் விடுதி, சிலமலை, போடிநாயக்கனூர் வட்டம், (50 மாணவர்கள்) |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 2. | தேனி மாவட்டம் | பள்ளி மாணவர் விடுதி, (கள்ளர் சீரமைப்பு) மார்க்கையன்கோட்டை.(50 மாணவர்கள்) |
| 3. | | பள்ளி மாணவியர் விடுதி, (கள்ளர் சீரமைப்பு) மார்க்கையன்கோட்டை. (50 மாணவியர்) |

இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.43,31,076/– (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து எழுபத்தாறு மட்டும்) மற்றும் தொடரா செலவினம் ரூ.6,25,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.49,56,076/–க்கு

(ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுபத்தாறு மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், புதிதாக துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 3 விடுதிகளுக்கு தலா ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர்கள், ஒரு காவலர் மற்றும் ஏவலர் என 12 பணியிடங்களை தற்காலிக அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், ஒரு விடுதிக்கு ஒரு துப்புரவு பணியாளர் என்ற முறையில் 3 பணியிடங்களை தொகுப்பூதிய அடிப்படையிலும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமனம் செய்யப்படும் நாள் முதல் சம்பளம் மற்றும் இதரப்படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | 3 பள்ளி விடுதிகளுக்கு தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 3 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 6 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 3 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 3 |
| | மொத்தம் | | 15 |

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் இணைப்பு I–ல் உள்ளவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி–1 (ரூ.16,43,692/–)</u>

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – I திட்டத்தில் சேராதது – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

(ii) <u>சீர்மரபினர் நலப் பள்ளி விடுதி –2 (ரூ.33,12,384/–)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது –101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது – AF –சீர்மரபினர் மாணவரில்லங்களும், உணவு இல்லங்களும்"

9. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுத்துணைப்பணி' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு / பொது–I) த்துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம்

கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு செலவு / பொது-I) த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2015–16 ஆம் நிதி ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவினை நிதி (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேற்காணும் 3 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 9850/மைம.ஆபி./ நாள் 08.02.2016–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கு கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2181(இரண்டாயிரத்து நூற்று எண்பத்தொன்று)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த.உதயச்சந்திரன்
அரசு செயலாளர்(பொ.)

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை – 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர்,சென்னை – 18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 1), சென்னை – 18 (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 2), சென்னை – 18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5/9.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாவட்ட ஆட்சியர், தேனி.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தேனி.
மாவட்ட கருவூல அலுவலர், தேனி.

நகல் :
நிதி (பி.மி.பி/ வ.செ.பொது1/ வ.செ. பொது2)த் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத் துறை செயலர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (பிந3/ சி.ந.ஆ.பி)த் துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

27

## இணைப்பு–I

**அரசாணை நிலை எண். 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை நாள் 08.02.2016.ன் படி**

**பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு 3 பள்ளி மாணவ / மாணவியர் விடுதிகள் துவங்குதல்**

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி – 1 (1 மாணவர் விடுதி)**

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி 1 திட்டத்தில்
சேராதது – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

01 சம்பளங்கள்
01 அடிப்படை சம்பளம் (DPC 2225-03-277-AA-0105)

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பிளட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 +ரூ.4600 தரஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 +ரூ.1300 தரஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 +ரூ.1300 தரஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| | ஓர் ஆண்டுக்குரியது | |
| 05 அலுவலக செலவினங்கள் 05 அறை கலன்கள் (DPC 2225-03-277-AA-0552) | | 30,000/– |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள் 01 வாடகை (ரூ.12,000 X 12 மாதங்கள்) (DPC 2225-03-277-AA-0614) | 1,44,000/– | |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (DPC 2225-03-277-AA-1917) | | --- |
| 24 பொருட்களும், வழங்கலும் (DPC 2225-03-277-AA-2407) | | 1,40,000/– |
| 34 ஏனைய செலவுகள், 01 ஏனைய இனங்கள் (DPC 2225-03-277-AA-3415) | 28,700/– | |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் (DPC 2225-03-277-AA-3424) | | 30,000/– |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள் 09 ஏனையவை (DPC 2225-03-277-AA-6798) | 3,97,800/– | |
| மொத்தம் | 5,70,500/– | 2,00,000/– |

சீர்மரபினர் நல பள்ளி விடுதிகள் – 2 ( 1 மாணவர், 1 மாணவியர் விடுதி )

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது –101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது – AF – சீர்மரபினர் மாணவரில்லங்களும்,உணவு இல்லங்களும்"

01 சம்பளங்கள்
01 அடிப்படை சம்பளம் (DPC 2225-80-101-AF-0103)

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பிஎட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 +ரூ.4600 தரஊதியம் | 2 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 +ரூ.1300 தரஊதியம் | 4 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 +ரூ.1300 தரஊதியம் | 2 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 2 |

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| | ஓர் ஆண்டுக்குரியது | |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-80-101- AF -0550) | | 60,000/– |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (2 Xரூ.12,000 X 12 மாதங்கள்)<br>(DPC 2225-80-101- AF -0612) | 2,88,000/– | |
| 19 இயந்திரமும் சாதனமும் –<br>01 வாங்குதல்<br>(DPC 2225-80-101- AF -1915) | | 25,000/– |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-80-101- AF -2405) | | 2,80,000/– |
| 34 ஏனைய செலவுகள்,<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-80-101- AF -3413) | 57,400/– | |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-80-101- AF -3422) | | 60,000/– |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை (DPC 2225-80-101- AF -6796) | 7,95,600/– | |
| மொத்தம் | 11,41,000/– | 4,25,000/– |

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்(பொ.)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

இணைப்பு – II

அரசாணை நிலை எண்.19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை நாள் 08.02.2016–ன்படி.

ஒவ்வொரு பள்ளி விடுதிக்கும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட செலவின விவரம் பின்வருமாறு:

| வ.எண். | பொருட்கள் | மாணவர் விடுதி செலவினம் ரூ. | மாணவியர் விடுதி செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1. | எரிவாயு இணைப்பு | 30,000 | 30,000 |
| 2. | நூலக வசதி | 30,000 | 30,000 |
| 3. | பாத்திரங்கள் | 30,000 | 30,000 |
| 4. | மரச்சாமன்கள் | 30,000 | 30,000 |
| 5. | அரவை இயந்திரம் | 12,500 | 12,500 |
| 6. | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 | 11,000 |
| 7. | இன்வர்ட்டர் | 15,000 | 15,000 |
| 8. | விளையாட்டுகருவிகள் | 5,000 | 5,000 |
| 9. | பாய் (50 X 60) | 3,000 | 3,000 |
| 10. | பெட்ஷீட் (50 X ரூ.180) | 9,000 | 9,000 |
| 11. | பாடக்குறிப்பு புத்தகம் | 10,000 | 10,000 |
| 12. | தட்டு மற்றும் டம்ளர் (50 X ரூ.75) | 3,750 | 3,750 |
| 13. | முதலுதவி பெட்டி | 650 | 650 |
| 14. | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 6,000 | 6,000 |
| 15. | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 | 5,100 |
| 16. | புத்தக அலமாரி | 10,000 | 10,000 |
| 17. | மின் அரைப்பான் | 6,000 | 6,000 |
| 18. | இட்லி வேகவைப்பான் | 8,000 | 8,000 |
| 19. | சுகாதரா குட்டை தகளி | ---- | 25,000 |
| | மொத்தம் | 2,00,000 | 2,25,000 |

| | | |
|---|---|---|
| 2 மாணவர் விடுதிக்கான தொடரா செலவினம் | = | ரூ.2,00,000 X 2 = 4,00,000/– |
| 1 மாணவியர் விடுதிக்கான தொடரா செவினம் | = | ரூ.2,25,000 X 1 = 2,25,000/– |
| | | மொத்தம் = 6,25,000/– |

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்(பொ.)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

## இணைப்பு –III

**அரசாணை நிலை எண். 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிநு1(2))த் துறை நாள். 08.02.2016–ன்படி**

**ஒரு பள்ளி விடுதி துவங்குவதற்கான சம்பளம் இல்லா இனத்தில் தொடர் செலவின விவரம்:**

| வ. எண். | பொருள் | எண்ணிக்கை | ஓர் ஆண்டிற்குரியது |
|---|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் (அரசாணை(நிலை) எண்.52, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 09.07.2013) | ரூ.755x52x10 மாதங்கள் | ரூ. 3,92,600/– |
| 2. | விடுதி வாடகை | ரூ.12,000 x12 மாதங்கள் | ரூ. 1,44,000/– |
| 3. | செய்தித்தாள் | ரூ.270 x10 மாதங்கள் | 2,700/– |
| 4. | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (பல்வகைச் செலவினம்) (அரசாணை(நிலை) எண்.7, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 18.01.2012) | ரூ.50x52x10 மாதங்கள் | 26,000/– |
| 5. | சிறப்பு உணவுக் கட்டணம் (அரசாணை(நிலை) எண்.54, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 09.07.2013) | ரூ.20x52x5 நாட்கள் | 5,200/– |
| | | மொத்தம் | 5,70,500/– |

ஒரு பள்ளி விடுதிக்கு ஓர் ஆண்டிற்காகும் செலவினம் = ரூ. 5,70,500/–

3 பள்ளி விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்காகும் செலவினம் = ரூ. 17,11,500/–
(5,70,500x3)

த. உதயச்சந்திரன்,
அரசுச் செயலாளர்(பொ.)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்